வகுப்பு எண்

# மாதிரி காலாண்டுத் தேர்வு–2024–2025

வகுப்பு 12 பொருளியல் காலம்:2.30

மதிப்பெண்கள்:90

## Part – I

**I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20**

1. . “ நவீனபேரியல் பொருளியலின் தந்தை” எனஅழைக்கப்படுபவர் யார் ?
   அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே .எம். கீன்ஸ் இ) ராக்னர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்
2. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.
   அ) உற்பத்தி மற்றும் பகிர்வும் ஆ) உற்பத்தி மற்றும் பரிமாற்றம்
   இ) உற்பத்தி மற்றும் நுகர்வு ஈ) உற்பத்தி மற்றும் சந்தையிடுகை.
3. மொத்த மதிப்பிலிருந்து .................. ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும் ?
   அ) வருமானம் ஆ) தேய்மானம் இ) செலவு ஈ) முடிவடைந்த பொருட்களின் மதிப்பு
4. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது ..........................
   அ) தனிநபர் வருமானம் ஆ) தலைவீத வருமானம்
   இ) பணவீக்க வீதம் ஈ) செலவிடக் கூடிய வருமானம்
5. நடப்புக் கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில்
   இருந்தால் அது...............எனப்படும்.
   அ) முழுவே லைவாய்ப்பு ஆ) குறைந்தளவு வேலைவாய்ப்பு
   இ) வேலைவாய்ப்பின்மை ஈ) வேலைக்கான வாய்ப்பு
6. வேலை வாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துரு
   ..................... ஆகும்.
   அ) தொகுத் தேவை ஆ) தொகு அளிப்பு இ) விளைவுத் தேவை ஈ) இறுதிநிலை நுகர்வு விருப்பு
7. தொன்மைக் கோட்பாட்டின் படி, வட்டி வீதம் ............... க்கான வெகுமதி
   அ) முதலீடு ஆ) தேவை இ) மூலதனம் ஈ) சேமிப்பு
8. குறைவான வட்டி வீதம்
   அ) நுகர்வைக் குறைக்கும் ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும்
   இ) சேமிப்பை ஊக்குவிக்கும் ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும்
9. மொத்த வருவாய்க்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு
   அ) நுகர்வுச் சார்பு ஆ) சேமிப்பு சார்பு இ) முதலீட்டுச் சார்பு ஈ) மொத்த தேவைச் சார்பு
10. ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் (Open Economy) இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை
    அ) குறைக்கிறது ஆ) உயர்த்துகிறது இ) மாற்றாது ஈ) மாற்றும்
11. மிகைப் பெருக்கி (Super Multiplier) என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்.
    அ) J. R. ஹிக்ஸ் ஆ) R.G.D. ஆலன் இ) கான் ஈ) கீன்ஸ்

12 ஆர்பிஐ –ன் தலைமையகம் அமைந்துள்ள இடம்
    அ) டில்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ) பெங்களூரு

13. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு
    அ) 1908 ஆ) 1910 இ) 1911 ஈ) 1914
14. கூலி மற்றும் மூலப் பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலை மட்டம்
    அதிகரிப்பது ..................... பணவீக்கம் ஆகும்
    அ) செலவு உந்து ஆ) தேவை இழுப்பு இ) ஓடும் ஈ) தாவும்
15. மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்
    அ) உயர்ந்த பட்சமாக ஆ) மிக மோசமாக இ) மிக குறைந்த பட்சமாக ஈ) மிக நல்ல நிலையில்
16. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது அழைக்கப்படுவது
    அ) தாவும் பணவீக்கம் ஆ) மிதமான பணவீக்கம் இ) உயர் பணவீக்கம் ஈ) பணவாட்டம்
17. வங்கிக் கடன் என்பது எதைக் குறிக்கிறது ?
    அ) கடன் பணம் ஆ) முன்பணம் இ) கடன் பணம் மற்றும் முன்பணம் ஈ) கடன் பெறுதல்
18 . நீண்டகாலக் கடன் வழங்கும் நிதி நிறுவனம்
    அ) உலக வங்கி ஆ) பன்னாட்டுப் பண நிதியம் இ) உலக வர்த்தக அமைப்பு ஈ) பிரிக்ஸ்
19. உலக வர்த்தக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம்
    அ) சிங்கப்பூர் ஆ) ஜெனிவா இ) சியாட்டில் ஈ) டோஹா
20. சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு
    அ) 1985 ஆ) 1988 இ) 1992 ஈ) 1998

www.Padasalai.Net

## Part - II

**II.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளி** 7X2=14.

21. முதலாளித்துவம் என்றால் என்ன ?
22. GNP கணக்கிடும் வாய்ப்பாட்டை எழுதுக.
23. ஊரக வேலையின்மையின் முக்கியமான இயல்பு யாது ?
24. சே விதியின் எடுகோள்கைளை பட்டியலிடுக.
25. சராசரி நுகர்வு நாட்டம் வரையறு.
26. முடுக்கி வரையறு.
27. நெகிழிப் பணம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.
28. மைய வங்கி என்பதனை வரையறு.
29. பன்னாட்டு பொருளியல் என்றால் என்ன ?
30. ஆசியானின் இரண்டு நோக்கங்கள் யாவை ?

## Part-III

**III.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளி** 7x3=21

31. நாட்டு வருமானக் கணக்கிடுதலின் பயன்களைப் பட்டியலிடுக.
32. தொகு தேவை என்றால் என்ன ? அதன் கூறுகளைக் கூறுக.
33. தொன்மையியத்தையும் கீன்சியத்தையும் ஒப்பிடுக.
34. தன்னிச்சையான முதலீடு, தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
35. மிகைப் பெருக்கி– விளக்குக.
36. பண அளிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?
37. நபார்டின் பணிகள் யாவை ?
38. இறக்குமதி கட்டுப்பாடு என்றால் என்ன ?
39. வாணிக ஒத்துழைப்பு தொகுதிகள் என்றால் என்ன ?
40. இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.

## Part – IV

**IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7x5=35

41. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. (அல்லது)
இர்விங் பிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.

42. முதலாளித்துவம், சமத்துவம், கலப்பு பொருளாதாரம் ஆகியவற்றின் தன்மைகளை ஒப்பிடுக. (அல்லது)
நாட்டு வருமானம் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை ?

43. ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி (அல்லது)
இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.

44. நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை விளக்குக. (அல்லது)
நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.

45. பன்னாட்டு பணநிதியத்தின் நோக்கங்களை விளக்குக. (அல்லது)
தொன்மைக் கோட்பாடு , கீன்சு கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

46. குறிப்பு எழுதுக. அ) சார்க் ஆ) ப்ரிக்ஸ் (அல்லது)
உள்நாட்டு வாணிகத்துக்கும், பன்னாட்டு வாணிகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்க.

47. கீன்சின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக. (அல்லது)
வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

**A.Alexis.**PG.Tr.Don Bosco Hr.Sec.School,Varadharajanpet. Ariyalur.Dt, 621805 .Cell:9543776128

www.Padasalai.Net